குடிநீர் வசதி, சாலை வசதி செய்து கொடுக்க அரசு முனைந்து செயல்பட இருக்கிறது. அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் போது நிச்சயமாக அந்தக் கிராமமும் கருத்தில் எடுத்துக்கொள் ளப்படும்.

மலைப்பகுதியில் உள்ள அரிசி ஆலைகள்.

*வினா எண் 281. திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கோடைக்கானல், ஊட்டி போன்ற மலைப்பகுதிகளிலுள்ள கூலிக்கு அரைக்கும் அரிசி ஆலைகளில் 'ஷெல்லர் டைப்' அரவை முறைக்கு விலக்களிக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள் ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இல்லை.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள பிற மாநிலங்களில், குறிப்பாக அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் இதுபோன்ற 'ஷெல்லர் டைப்' அரவை முறைக்கு விலக்களித்து இருக்கிறது. அதேபோல் நம்முடைய அரசும் விலக்களிக்க மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் ஷெல்லர் பொருத்துவதில் இருந்து விதிவிலக்கு அளித்து இருப்பதாக இந்த அரசுக்கு தகவல் கிடைக்கவில்லை. அந்த ஷெல்லர் டைப்புகளை பொருத்துவதற்கான காலகெடுவைத்தான் மத்திய அரசு நீட்டித் துக் கொடுத்து இருப்பதாகத் தகவல் கிடைத்து இருக்கிறது என்றாலும், அதற்கான விவரங்களைச் சேகரித்து மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவிப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, தமிழகத் தில் உள்ள பல அரசு ஆலைகளில் ஷெல்லர் டைப் போட வேண்டும் என்று தற்போது மாவட்டங்களில் இருக்கும் டி. எஸ். ஓ.க்களால் வற்புறுத்தப்படுகிறது. அப்படி ஏதேனும் ஆணையை அரசு பிறப்பித்து இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஆணை எதுவும் இந்த அரசு பிறப்பிக்கவில்லை. அந்த ஆணை மத்திய அரசாலே பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

1979 மார்ச் 8] [திரு. க. உரொ. எட்மண்ட்]

மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தியதன்பேரில் அந்த ஷெல்லர் டைப் அமைக்கும் கால அவகாசத்தை மத்திய அரசு நீட்டித்து கொடுத்து இருக்கிறது. ஏற்கெனவே இயங்கும் ஆலைகளுக்கு—1973ஆம் ஆண்டுவரை உரிமம் வழங்கப்பட்ட ஆலைகள் 1973ஆம் ஆண்டிற்குப் பின்னரும் 1975ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் தேதிக்கு முற்பட்டும் உரிமம் வழங்கப்பட்ட ஆலைகள்—1980 ஏப்ரல் 30ஆம் தேதிவரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

புதிய ஆலைகளுக்கு ஆலைகள் அமைக்கப்படும் கட்டிடம் பூர்த்தியடைந்தும், இயந்திரங்கள் பொருத்தப்பட்டுப் அல்லது இயந்திரங்கள் பொருத்தும் நிலை இறுதிக் கட்டத்தை அடைந்தும் உரிமத்திற்காக 30–4–1977-க்கு முன்னர் விண்ணப்பம் செய்துள்ள ஆலைகளுக்கு உரிமம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்கு அவகாசம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 30–4–1977-க்குப் பிறகு உரிமத்திற்காக விண்ணப்பித்த ஆலைகளுக்கு உரிமம் வழங்குமுன்னர் நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட வேண்டும்.

ஏற்கெனவே இயங்கும் ஒரு ஹல்லர் பொருத்தப்பட்ட ஆலைகளுக்கு 6–9–1981 வரை அவகாசம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. கிராமப் பகுதியில் அமைந்துள்ளதாகவும் 15 குதிரை வேகத்திற்கு மேற்படாததாகவும் கூலி அரைவைக்குக் கொண்டு வரப்படுகின்ற நெல்லை அரைக்கின்ற ஆலைகளுக்கு உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 5 ஆண்டு காலம் வரை அவகாசம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள இந்த வரையறைக்குள் அடங்காத ஆலைகளுக்கு உரிமம் வழங்குவதற்கு முன்னர் நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இது ஏற்கெனவே அனுமதி வாங்கி, அரிசி அரைக்கும் இந்த ஆலைகளுக்கு ஷெல்லர் டைப் இயந்திரங்கள் பொருத்தப்பட்டால்தான் அனுமதி வழங்கப்படும் என்றால் அது சாதாரணமானவர்களால் முடியாது; வசதி படைத்தவர்களால்தான் முடியும். புதிதாக ஆரம்பிக்கக் கூடிய ஆலைகள் இதைப்போன்ற ஷெல்லர் டைப் போட்டால்தான் அனுமதிக்கப்படும் என்பது ஓரளவு நியாயம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய கேள்வியில் பாதிக்கு அமைச்சரவர்கள் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டார்கள். நீங்கள் புதிதாக ஏதாவது தகவல் வேண்டுமென்றால் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: நீங்கள் ரொம்ப அவசரப்படுகிறீர்கள். ஏற்கெனவே அனுமதி வழங்கி நடைபெற்று வரக்கூடிய ஆலைகளில் இந்த ஷெல்லர் டைப் போட வேண்டுமென்று சொன்னால் அது வசதி படைத்தவர்களால்தான் முடியும்;

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1979 மார்ச் 8

வசதி இல்லாத மற்றவர்களால் போட முடியாது. ஆகவே, அவர்களைத் தீர்த்துக்கட்டும் நோக்கத்தோடுதான் இந்த உத்தரவு வந்துள்ளது என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா? அந்த வசதி இல்லாதவர்களையும் வாழவைக்க வேண்டுமென்ற அடிப்படையில் அவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டும்; இனிமேல் ஆரம்பிக்கிறவர்களுக்கு மட்டும் அந்த ஷெல்லர் டைப் போட்டால்தான் அனுமதிக்கப்படும் என்ற முறையில் மத்திய அரசை வற்புறுத்துவார்களா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசை வற்புறுத்துவார்களா என்று கேட்டதிலிருந்து இந்த உத்தரவை மத்திய அரசுதான் போட்டது என்பதை அவர்கள் நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. யாரையோ சிலரை அழிப்பதற்கு அல்லது ஒழித்துக்கட்டுவதற்கு என்ற நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அவர்கள் எந்த நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி பதில் சொல்ல நான் தகுதி படைத்தவன் அல்ல.

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, மத்திய அரசு ஷெல்லர் டைப் ஆலைகளை கொண்டுவர உத்தரவு போட்டதாகச் சொன்னார்கள். அதை வைத்தால் என்ன நன்மை? அது இல்லாவிட்டால் என்ன கெடுதல்?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவரவர்களே, ஷெல்லர் டைப் அரைவை பொருத்தப்பட்டால் அரிசி அதிகமாக உடைவதில்லை. இன்னும் அதிலே இருக்கிற சத்துப்பகுதி—பிரான் என்று சொல்வார்கள், அந்த தவிடு நீக்கப்படுவதில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்வதின்பேரில் மத்திய அரசு இப்பேர்ப்பட்ட உத்தரவைப் பிறப்பித்திருப்பதாகத் தெரிவித்தது.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவரவர்களே, ஷெல்லர் டைப் அமைக்க ஏறத்தாழ 30,000 அல்லது 40,000 ரூபாய் தேவைப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதேநேரத்தில் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் கிராமம் ஒன்றுக்கு அரைவை மில் வைத்துக்கொள்ளும் உத்தரவைத் தந்திருக்கிறார்கள். அப்படியானால் ஒவ்வொரு கிராமத்திற்கும் லைசென்ஸ் கொடுக்கும்போது 30,000 அல்லது 40,000 ரூபாய் அதிகம் செலவு செய்து ஷெல்லர் டைப் வைக்கக்கூடிய சக்தி இல்லை என்ற நிலை ஏற்பட்டால், அந்த வசதி இல்லாதவர்களுக்கு இந்த மில்களை வைக்க வாய்ப்பு இல்லாமல் போய்விடும். அதை மனதிற்

1979 மார்ச் 8] [திரு. ரா. மார்க்கபந்து]

கொண்டு கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அனுமதி வழங்கும் போது இந்த ஷெல்லர் டைப் போட வேண்டுமென்ற அவசியம் இல்லை என்ற உத்தரவை இந்த அரசு பிறப்பிக்குமா ?

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். இந்த உத்தரவு மாநில அரசு கொடுக்கவில்லை, மத்திய அரசுதான் இந்த உத்தரவை பிறப்பித்திருக்கிறது என்று பலமுறை சொல்லியிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிராமங்களிலே இப்பேர்ப்பட்ட ஆலைகளை ஆரம்பிக்கும் போது ஏற்படுகின்ற சிக்கல்களைப் பற்றிச் சொன்னார்கள். இந்த அரசும் இப்படிப்பட்ட சிக்கல்களை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அதைத் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறது. அப்படி வலியுறுத்திக்கொண்டிருப்பதின் அடிப்படையிலே தான் கால அவகாசம் கொடுப்பதற்கு மத்திய அரசு முன்வந்திருக்கிறது என்றாலும் இந்த மாநில அரசு மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டுதான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. போ. எ. சீனிவாச ரெட்டியார்: தலைவரவர்களே, அரவை மில்களில் இந்தமாதிரி ஷெல்லர் டைப் போடுவதன் காரணமாக மாடுகளுக்கு தவிடு கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகவே மத்திய அரசு போட்டிருக்கின்ற உத்தரவை இந்த அரசு ரத்து செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, மாடுகளுக்கு தவிடுபோன்ற தீவனம் கிடைப்பதில்லை என்று கவலைப்படுவதைவிட மனிதர்களுக்கு சத்து மிக்க அரிசி உணவு கிடைக்கிறது என்பதிலே நாம் அதிக மகிழ்ச்சி அடையலாம்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, இந்த மாதிரி ஷெல்லர் டைப் போடுவதற்கு ரூபாய் 20 ஆயிரம், ரூபாய் 30 ஆயிரம் தேவை என்கின்ற காரணத்தால் நடுத்தர தொழில் அதிபர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆனால் மத்திய அரசு இவ்வாறு பொருத்தவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஆகவே நடுத்தர தொழில் அதிபர்களைப் பாதுகாக்கின்ற முறையிலே மாநில அரசே இந்த நடுத்தர தொழில் அதிபர்களுக்கு கடன் வழங்கி உதவி செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : தலைவரவர்களே, அப்பேர்ப்பட்ட ஆலோசனைகள் எதுவும் இப்போது இந்த அரசிடம் இல்லை. ஆகவே இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலோசனையை ஏற்றுக்கொண்டு அதைப்பற்றி இந்த அரசு பரிசிலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : தலைவரவர்களே, இந்த ஷெல்லர் டைப் பொருத்துவதால் எந்தவிதமான பயனும் இல்லை என்று விவரம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். இப்படிப்பட்ட சட்டங்கள் வருகின்ற போது சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்றவர்கள் மேலே வரமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கொஞ்சம் முன்னேறி வருகின்ற சமயம் இந்த மாதிரி சட்டங்கள் வந்து அவர்களது முன்னேற்றத்தை தடை செய்கிறது. ஆகவே இந்த மாதிரி நிலையினை அரசு அறிந்து, சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்றவர்கள் வளர்வதற்கேற்ற வகையிலே, இந்த மாதிரி ஷெல்லர் டைப் எல்லாம் தேவையில்லை என்று அரசு போராடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, அரசு போராட வேண்டிய அவசியம் இல்லை, ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்ன உபதேசத்தை டெல்லியிலே நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் மூலமாக எடுத்துக் சொல்வதற்க ஏற்பாடு செய்தால் பொருத்தமாக இருக்கும் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலூரில் கூடுதல் துணை நீதிமன்றம்

* வினா எண் 282 — திரு. ரா. மார்க்கபந்து ; மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு ஜில்லா வேலூரில் உள்ள இரண்டு சப்-கோர்ட்டுகளில் அதிக வழக்குகள் தேங்கி நிற்பதால் அங்கு ஒரு கூடுதல் சப்-கோர்ட் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

The Hon. Thiru K. NARAYANASWAMY : The constitution of a Second Additi Sub-Court at Vellore was sanctioned in G. O. Ms. No. 2921, Home, dt. 28-11-78 and the above court started functioning from 19-1-79 F. N.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், இவ்வாறு இரண்டாவது அடிஷனல் சப் கோர்ட் ஆரம்பிப்ப... மேலும் சில இடங்களிலே அதிக வழக்குகள் தேங்கி இருப்பதன் காரணத்தால் தான் இந்தக் கேள்வியினைப் போட்டேன். ஆகவே